ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணே நம:.

# ஞானசார விளக்கம்.


தே. அ. சாமி குப்புசாமி அவர்களால்

இயற்றப்பட்டது.

ACC NO 39250

இரண்டாம் பதிப்பு.

இதன் விலை] 1930. [அணா 1.



VALLUVAR ... A.B. 39250

ஓம்
தத்சத்
பரப்பிரஹ்மணே நமః.

# ஞானசார விளக்கம்.

இது
திருத்துருத்தி - இந்திரபீடம் - ஸ்ரீ கரபாத்திரசுவாமிக ளாதீனம்
ஈசூர் - ஸ்ரீ சச்சிதாநந்த சுவாமிகளின் பாதசேகரர்
39 - ஆவது பட்டாளத்தில் சுபேதார் மேஜராயிருந்த ஆத்மஞானி
ஸ்ரீ ஐயாக்கண்ணு தேசிகமூர்த்திகள் மாணவருளொருவராகிய
ஸ்ரீமத். தே - அ - சாமி குப்புசாமியவர்களால்
இயற்றப்பட்டு,
ஆசிரியர் ஸ்ரீமத். கோ. வடிவேலு செட்டியாரவர்களால்
பார்வையிடப்பட்டு,
காளத்தி - இ. சிதம்பரசாமி புராணிகரவர்களால்
சென்னை - அமெரிக்கன் டைமெண்ட் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.
இதன் விலை] 1930. [அணா 1.



ஓம்

தத்சத்

பரப்பிரஹ்மணே நமஃ.

# ஞானசார விளக்கம்.

இது

திருத்துருத்தி - இந்திரபீடம் - ஸ்ரீ கரபாத்திரசுவாமிக ளாதீனம்

ஈதூர் - ஸ்ரீ சச்சிதாநந்த சுவாமிகளின் பாதசேகரர்

39 - ஆவது பட்டாளத்தில் சுபேதார்மேஜராயிருந்த ஆத்மஞானி

ஸ்ரீ ஐயாக்கண்ணு தேசிகமூர்த்திகள் மாணவருளொருவராகிய

ஸ்ரீமத். தே - அ - சாமி குப்புசாமியவர்களால்

இயற்றப்பட்டு,

ஆசிரியர் ஸ்ரீமத். கோ. வடிவேலு செட்டியாரவர்களால்

பார்வையிடப்பட்டு,

காளத்தி - இ. சிதம்பரசாமி புராணிகரவர்களால்

சென்னை - அமெரிக்கன் டைமெண்ட் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

1930.

இதன் விலை] [அணா 1.

A. E. 39252

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
39250

# முகவுரை.

எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் நிலவுகின்ற எண்ணிறந்தகோடி யண்டங்களுள் சர்வதுக்கநிவிர்த்தி - பரமாநந்தப் பிராப்தி என்னும் முத்திப் பேற்றை யடைதற் கிடமா யிருத்தலால் மிகச் சிறந்ததாயுள்ள பூவுலகத்தில் சீதோஷ்ண சமத்துவ முடைமையாலும், பூகம்பம் - எரிமலை முதலிய இடையூறின்மை யுடைமையாலும், புண்ணிய பூமி என்று போற்றப்படுவதாய தென்னாட்டில் பிறையாறு என்னும் பெயரினால் பிரசித்தி யடைந்து பொறையாறு என்று வழங்கப் பெறும் திருநகரத்தில் தமிழ் மக்கள் செய்த தவத்துருவாய்த் திருவவதாரம் செய்தவரும், திருத்துருத்தி-இந்திரபீடம்-ஸ்ரீ காபாத்திர சுவாமிகளாதீனம் - நாகை - ஸ்ரீ அருணாசல சுவாமிகளது அநுக்கிரகம் பெற்றவரும், சகச நிஷ்டாபரரும்; ஞானவாசிட்டம் - கைவல்லிய நவநீதம் முதலிய ஞானசாத்திரங்கட்கு உரைகண்டவரும், அடியேனது பரமாசாரிய சுவாமிகளான ஈசூர் - ஸ்ரீ சச்சிதாநந்த சுவாமிகளை

ஆட்கொண்டவரும், மேற்கூறிய பிறையாற்றிலேயே சமாதியாலயங்
கொண்டு வீற்றிருப்பவருமான ஞானபாஸ்கரர் பிறைசை - ஸ்ரீ அரு
ணாசல சுவாமிகளின் பிரபாவத்தையும், அவரது சமாதியாலயம்
பிறையாற்றிலிருப்பதையும், அறிஞ ரருண்மொழிகளா லறிந்தது
மாத்திரம் உடையவனாக விருந்த ஏழைமதியேன் அச்சுவாமிகளின்
அருளமுதை யாவரும் புசிக்கச் செய்யவந்த புனித வள்ளலான
பிறையாறு - ஸ்ரீமத் - வெ. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள் சென்ற
அட்சய வாண்டு புரட்டாசித் திங்களில் கருணை கூர்ந்தனுப்பிய குரு
பூஜா பத்திரிகையைச் சிரம் - கண் - மார்பு - புயங்களில் தரித்துப்
போற்றி, ஆநந்தக் கண்ணீர் அருவியாற்றைப்போல் பெருக் கெடுப்
பக் கரைகடந்த களிப்பென்னுங் கடலினுளாழ்ந்து, சென்னை கோம
ளேச்சுரன்பேட்டையில் வசிப்பவரும், இலக்கண-இலக்கிய-வேதாந்த
தருக்க போதகாசிரியரும், அருண்மொழி ததும்பும் அமுதவாயரும்,
தமிழ் நாடு போற்றும் தனித்தமிழ்ச் சரபமும், காசினிமுழுதும் கைம்
மாறுகருதாது பிரசங்கமாரிபொழியும் பேருண்முகிலும், பேயேன்
புகன்ற புன்னூற்களை யெலாம் நன்னூலாக்கித்தந்த ஞான தாதா
வும், அடியேன் ஆத்மார்த்தருமான ஸ்ரீமத் - கோ - வடிவேலு



செட்டியாரவர்களையும் எமதனுக்கத் தொண்டர்களான திருவாவடு
துறை - சிரஞ்சீவி துளசிராம் நாயுடு, சிரஞ்சீவி - பிரசங்க சிந்தாமணி.
த. கோவிந்தசாமி பிள்ளை, சிரஞ்சீவி - காளத்தி - இ - சிதம்பரசாமி
புராணிகர் முதலியவர்களையும் உடனழைத்துக் கொண்டு, பிறைசை
யம்பதி யணைந்து, காகமுறவு கலந்துண்டாங்கு குருபூஜா தரிசனஞ்
செய்து, ஷை ஸ்ரீமத் செட்டியாரவர்கள் தலைமையின்கீழ் நன்னெறிச்
சொற்பொழிவு நடைபெறுவித்து, மீண்டு போதரும் போழ்து திரு
வருளேவலால் ஷை ஸ்ரீமத் செட்டியாரவர்கள் ஒன்றுக்கும் பற்றாத
புல்லனேனைப் பொலிவுடனோக்கி, நுஞ்சுவா நுபவத்தை ஞானசார
விளக்கம் என்னும் பெயரால் ஒரு நூலாக யாத்துத் தமிழ் மொழி
யுணர்ந்த சற்சனர் கரத்தில் அஸ்த பூஷணமாக அநவரதமு மிருக்கச்
சட்டைப் பையளவில் பதிப்பித்திடுதியென ஆணையிட்டனர்; அவ்
வாஞ்ஞையை அடியேன் சென்னியில் ஏற்று, அங்ஙனே "மெய்யாம்
பொருளாய்" என்னும் முதற் குறிப்பினையுடைய ஒரு வெண்பாவைக்
கூறி ஞானசார விளக்கமென்னும் அபிதானத்தானே வெள்ளறிவினே
னென்ப துணர்த்த வெண்பாவடிவினாலேயே ஒரு நூல் யாத்து,
அதனை ஷை ஸ்ரீமத் செட்டியாரவர்கள் சந்நிதியிலளித்தனன்; அவர்
கள் அதனைப் பரிசோதித் தளித்தார்கள்.

அதனை ஷை அணுக்கத்தொண்டர்களி லொருவராகிய சிரஞ்சீவி காளத்தி - இ - சிதம்பரசாமி புராணிகர் அச்சுவாகனமேற்றி, பிரபவ வாண்டு-புரட்டாசித் திங்கள்-24-ஆம் நாள் - நிறைமதி-உத்திரட்டாதி யுடன் கூடிய சோமவாரத்தன்று ஷை பிறைசை - ஸ்ரீ அருணாசல சுவாமிகள் குருபூஜா காலத்தில் அச்சுவாமிள் சமாதியாலயத் தில் ஷை செட்டியாரவர்கள் தலைமையிற் கூடிய புலவர்கழகத்தில் அரங்கேற்றுவித்து, அவனியி னுலவச் செய்தனர்.

இங்ஙனம் இந்நூல் வெளிவரத் தூண்டிய திருவருளையும், அத் திருவருட் டூண்டலுக் கிடனாகவும் பிழைகளைந்தளித்த பெருந் தகைமை யுடையராகவும் விளங்கும் ஷை ஸ்ரீமத் செட்டியாரவர்களை யும் பிரதியுபகாரத்தா லுவப்பிக்கச் செய்யவல்லே னல்லேனாகிய எளி யேன் மனமொழிமெய்களால் சிந்தித்துப் போற்றி வழிபாடு செய் யுத் திருவருளைப் பிரார்த்திக்கின்றனன்.

இங்ஙனம்

அன்பன்,

தே. அ. கு.

---

சென்னை - ஹிந்துதியலாஜிகல் ஹைஸ்கூல்

தலைமைத் தமிழ்ப் பண்டிதரும்,

இலக்கண-இலக்கிய-வேதாந்த-தருக்க போதகாசிரியருமான


ஸ்ரீமத் - கோ - வடிவேலு செட்டியாரவர்களியற்றிய

## சிறப்புப் பாயிரம்.

நிலமண்டில வாசிரியப்பா.

பொற்பமைந் தொளிரும் பொன்னம் பலவன்
அற்புத சச்சி தானந் தன்சீர்
மறவா வையாக் கண்ணு மாண்பினன்
அறமா ரடிக ளகத்தி லமர்ந்தவன்
பொன்னம் பலத்தொளிர் புண்ணிய நாதன்
தன்னடி கருதுஞ் சாமி குப்பு
சாமி யென்னுஞ் சாந்த சீலன்
காமிய கருமங் கனவினு மெண்ணான்

நாரணி செய்த நல்லன தானம
பூரண மாக்கும் புனித மூர்த்தி
மறைமுடி வின்பொருண் மனத்தி னிலேக்கக்
கறையற வுணர்ந்தோன் கண்ணு விளங்குவோன்
தரையினே யாலே தவிப்ப தொழியக்
கரையறு சித்துரு வாகக் கரைய
வளமறு சன்மம் வற்றிப் போக
அளவறு மாரண வரும்பொருள் விளங்க
வேதாந் தத்தின் விழுப்பொருள் பரவ
மாதா மகற்கு வகுத்துரைப் பதுபோல்
நல்லுப தேச நடையினைக் காட்டி
அல்ல லறுக்கு மமைப்பின தாக
மோன நிலேயமர் மூத்தர் வியக்க
ஞான சார நவின்ற னதனை
நன்மதி கொண்டு நாளும் படிப்போர்
துன்பறு நிலேயினைத் துன்னிடு வாரே.



திருத்துருத்தி இந்திரபீடம்
ஸ்ரீகரபாத்திர சுவாமிகளாதீனம்
ஸ்ரீ ஈசூர் - சச்சிதாநந்த சுவாமிகள்.



கே. அ: சாமி குப்புசாமி.

ஓம்
தத்சத்
பரப்பிரஹ்மணே நம:

# ஞானசார விளக்கம்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 39250

## பாயிரம்.

### காப்பு.

### திருவணக்கம்.

நேரிசை வெண்பா.

[illegible] பொருளாய் விளங்குசிவ நீயென்ற
அய்யாக்கண் ணுப்பேர்கொ ளாரியனே—துய்யசு
யிளிர்ஞான சார விளக்கம் விளம்ப
ஒளிர்வாயென் னுள்ளத் துவந்து. (க)

ஸ்ரீ நாகை - அருணாசல சுவாமிகள் வணக்கம்.

பிறைசையரு ணாசலனும் போறிவன் றன்னை
மறைமொழியா லாண்ட மகிபன்—நிறைஞான
நாகையரு ணாசலனார் நற்றாள் பணிந்திந்நூல்
ஓகையுற்றுச் சொற்றே னுவந்து. (௨)

ஸ்ரீ பிறைசை - அருணாசல சுவாமிகள் வணக்கம்.

இறையென் பரமா ரியன்றன்னை யாண்ட
பிறைசையரு ணாசலப்பேர்ப் பெம்மான்—நிறையடியைத்
தாங்கிமுடி மேன்ஞான சாரவிளக் கங்கண்டேன்
பாங்கினுல குய்யப் பரிந்து. (௩)

ஸ்ரீ ஈசூர் - சச்சிதாநந்த சுவாமிகள் வணக்கம்.

அவனியெலாஞ் செய்த வருந்தவத்தி னாலே
புவனிதனிற் சற்குருவாய்ப் போந்த—சிவவடிவாம்
சச்சிதா நந்தனடித் தாமரைப்போ தென்னுடைய
உச்சிவைத்திந் நூலுரைத்தே னோர்ந்து. (௪)



## நூற்காரணம்.

என்குரவன் சொல்லுக் கிறையுந் தவறாமல்
உன்னி யநேகநா ளுள்ளுழைத்தே—என்னையான்
பூரணனாக் கண்டு புனிதவிந் நூலளித்தேன்
ஆரணங்க ளொப்ப வறிந்து. (௫)

என்குரவன் றன்னையா ளென்பரம வாரியனால்
உன்னி யுழைத்துள் ளுணர்வொளியாய்—இன்னலறக்
கண்டிந்த நூலளித்தேன் காயம்பொய் யென்றறிந்து
பண்டிதரே பற்றறுமின் பார்த்து. (௬)

என்போன் றிருக்கின்ற வேழைமதி மாணவர்க்கும்
பொன்போன்ற ஞானநிலை போதகர்க்கும்—முன்னடந்த
தானசம் வாதமுறை யாக வமைந்துள்ள
ஞானநூ லாகு மயந்து. (௭)

உலகை யழிக்கு முணர்வைவெளி யாக்கும்
வலமான வுத்திபக்கு வர்கட்—கிலகநல்கும்
ஞானப் பெருங்கனியி னற்சா றநுபவத்தை
ஊனமறக் கொண்டவிந் நூலோர்த்து. (௮)

# நூல்.

---

### நேரிசை வெண்பா.

துக்கப் பிறப்பைத் தொலைத்துச் சுகமடையத்
தக்கவழி யாதென்று தானழுது—துக்கமுற்ற
பக்குவன்றன் முன்னே பரமன் குருவாகித்
தக்கதுறை யாதென்றான் சார்ந்து. (க)

பாலைவனத் துற்றுப் பதைபதைத்து வாடினர்க்குச்
சோலைக் கதலிவனந் தோன்றியபோல்—வேலைசூழ்
பாரிற் பலதுயரம் பட்டவென்னை யாளவந்த
ஆரியனே காப்பாயென் றார்த்து. (உ)

துக்கமெலாஞ் சொல்லியே சோர்ந்தழுது சற்குருவே
பக்குவரைக் காக்கும் பரசிவனே—எக்கலையும்
போற்றும் புனிதா புலையேன் பிறப்பொழியச்
சாற்றுமகா வாக்யமென்றான் றாழ்ந்து. (ங)



தொழுதுநின்ற மாணவன்றன் றுய்யகுறி நோக்கி
எழுந்திடென் றேமுன் னிருத்தி—வழுவா
துணர்த்தவகத் தெண்ணினா னோர்மொழியை யாசான்
கணத்திற் பிறப்பறுக்கக் காண். (ச)

உன்னிமித்த மாக வுலகமெலா மீடேற
என்னிதயத் துள்ளபொரு ளேற்குமா—றுன்றனக்கிங்
குள்ளங்கை நெல்லியைப்போ லோதுவனா னுள்ளபடி
கள்ளமறக் கொண்டுய்வாய் கண்டு. (ரு)

புறம்புமனம் போக்காமற் பொன்போலென் வாக்கை
மறதியுறா மற்கேட்டு வந்தால்—பிறவியற்றுத்
தானா விளங்குந் தனிநிலையைப் பெற்றுணர்வு
தானாவாய் நீயே தலை. (சு)

நினைவாற் கொடும்பிறவி நீங்கா தெடுப்போம்
நினைவில்லை யேற்பிறப்பு நீங்கும்—நினைவே
பிறவிதரும் வித்தாகும் பேதைமட மானா
திறசிவனைச் சிந்தி தெளிந்து. (எ)

சாட்சிநீ சாந்தனீ சத்துநீ சங்கையற்ற
காட்சியொடு மூன்றவத்தை காண்பவனீ—மாட்சியா
எல்லா மறிந்தவனீ யெங்கு முறைபவனீ
நல்லாருண் ணிற்பவனீ நாடு. (அ)

துக்கங் கடந்தவனீ தூய்ய பரவெளிநீ
எக்கலையும் போற்று மிறையவனீ—தக்கவர்கள்
கொள்ளும் பொருணீ குறிகுணமு மற்றவனீ
கள்ளமிலா நிர்நிலையைக் காண். (௯)

எல்லை கடந்தவனீ யெங்கு நிறைந்தவனீ
தொல்லையாஞ் சிற்சோதி தூயவனீ—சொல்லுகின்ற
வாக்காதிக் கெட்டாய்நீ வம்பருக்கு மெட்டாய்நீ
தாக்கற்ற துன்சொருபந் தான். (௧0)

நீவிமல னீசுத்த னீஞானி நீதீரன்
நீவிளக்க னீநித்த னீயேகன்—நீவிமுத்தன்
எல்லா மறிபவனீ யேகசின் மாத்திரனீ
நல்லா யிவையகத்து நாடு. (௧௧)



பூரண மான பொருணீ புவிக்குநற்
காரணனீ ஞானக் கரும்புநீ—ஆரணத்தின்
உச்சி யுறைபவனீ யோதற் கரியவனீ
இச்சை யறுத்தே யிரு. (௧௨)

சொல்லும் பொருளுநீ துக்க மொடுசுகநீ
எல்லையெலா மாய்நின்ற வேகனீ—நல்ல
பொருளாகு முன்னைப் பூரணமாய்க் காண்பாய்
இருளற்று வாழ்வா யினிது. (௧௩)

நூலைவிட் டாடையிலை நன்னைவிட்டுப் பாரில்லை
பாலைவிட்டு நெய்யில்லாப் பான்மைபோல்—மாலை
ஒழித்தார் துணிபீ தொழித்துக் கவலை
விழித்துணர்வாய் நின்னை விரைந்து. (௧௪)

அல்லும் பகலுமிலை யற்ப வணுவுமிலை
எல்லாநீ யாகு மிருந்தறிவாய்—நல்லவனே
சோதித் தறிவாயேற் சோதியா முன்வடிவம்
கோதில்லை யீதுண்மை கொள். (௧௫)

பூதநீ யல்லை புதைமாயை நீயல்லை
ஏதுநீ யல்லை யெழில் வடிவ—போதசிவ
நீநான் சொலியநெறி நீங்கா தறிமாணு
நீநானென் பேதமற நின்று. (கசு)

உள்ளும் புறமுநிறை யுன்னைவிட்டு வேறுண்டோ
உள்வேறு வுன்னுதே யோது புறம்—உள்ளுமே
உற்றுணரி னுன்னையன்றி யோதுசிவம் வேறுண்டோ
நற்புதல்வா விங்கிலக்க ணண்ணு. (கஎ)

நீநானும் வேறே நிசவுருவைச் சோதிக்கின்
நீநானு மொன்றே நிசமாக—நீநானு
வேறுள்ள கற்பனையால் வீணுப் பிறப்புற்றோம்
மாறுபடேன் மாணவனே மற்று. (கஅ)

தானே யுலகுமுதற் றானே மறைக்குமுதல்
தானே கெடாத தனிப்பொருளாம்—தானேதான்
என்றென்னைப் பற்பலவா வேத்தித் துதிக்கின்றேன்
என்னேயோ விப்புதுமை யிங்கு. (கக)



பிறப்பிறப்பு மூப்புப் பிணிகணமக் கில்லை
திறஞானப் பார்வையொன்றாற் றேரின்—உறமாகச்
சொற்றபடி நின்றொழுகிச் சோதிபரி பூரணமாக்
கற்றவற்றை விட்டுனீ காண். (உ0)

சோதியெனத் தன்னைத் துணிந்தறியார் தாமுடைய
சாதிமத தர்க்கத்தாற் றாழ்வடைவார்—கோதில்லா
உன்னை நிறைசிவமா வுன்னி யுணர்வாயேல்
பன்னுகின்ற தாழ்வடையாய் பார். (உக)

கல்லினிடைச் சித்திரம்போற் காணு முலகநம்முள்
கல்லைவிட்டுச் சித்திரத்தைக் கண்டார்—நல்லறிஞர்
அக்கினியிற் சூடுபோ லாமாயை யென்றறைவர்
இக்குறிப்பை நன்காய்ந் திரு. (உஉ)

இங்கெங்குஞ் சத்துருவா வேதமற யானெனிர்வேன்
சிங்கலற யானே சிவமென்று—பங்காம்
உடம்புலக வாசனையற் றுன்னும வுன்னின்
திடமாச் சிவமாவாய் தேர்ந்து. (உஙு)



ஞானசார விளக்கம்.

நாமரூ பம்பற்றி நண்ணா நினைவெல்லாம்
நாமரூ பம்மழியி னாசமுறும்—நாம
உருவனினை வற்றா லொளிவடிவா யுன்னை
இருளறவே காண்பா யிணையந்து. (உச)

நினைவாந் திரையதுவே நீங்காமா மாயை
நினைவன்றி யில்லைசக நின்பால்—நினைவோ
உதித்தொடுங்குந் தானத்தை யோயாம லென்றும்
மதித்துணர்வா யிவ்வுண்மை வாய்ந்து. (உரு)

எங்குநிலை பூரணமா வேகசிவந் தானானோன்
எங்கெங்குச் சென்றாலு மின்புருவா—எங்குமே
தன்னையலாற் காணான் றனைப்பல் வடிவாக
உன்னிப்பார்த் துக்களிப்பா னுள். (உசா)

உலக முதிக்குமிட முற்றுற்று நோக்கின்
கலந்தீங் கிலாதவிட நண்ணும்—புலன்களெலாம்
ஆளாப் பணியுமிட மாநந்த மானவிடம்
நாளாதி யற்றவிட நாடு. (உஎ)

நானில்லா தில்லையிட நண்ணுமிட மெல்லாநான்
வானில்லா தில்லையாம் வாரிபோல்—வானியற்பூ
இல்லையேற் றேனிலைபோ லின்புருவா நின்னையன்றி
இல்லையுல கெல்லாநீ யெண். (உஅ)

சூரியனை முன்னிட்டே தோன்றுங் கணமாதி
சூரியனே நாள்வருடஞ் சூழுங்கால்—சூரியநல்
புத்தியினா லாய்ந்து புகலுலகா திக்கெல்லாம்
நித்தியமா நீயே நிலை. (உகூ)

கண்ணாஞ் சிவமே கருதுலக மாமென்ன
உண்ணாடிக் காணாதா ரோயாமல்—எண்ணரிய
வேத முபநிடத வேறுபல் சாத்திரங்கள்
ஓதிடலால் யாதுபய னோது. (ரு0)

உடம்பையன்றி நானிலையென் றுன்னுவதே பந்தம்
மடம்படுவா ரீதான் மயங்கித்—திடவறிவைச்
சிந்தித் துணராது சீர்கெட் டலைகின்றார்
எந்தநிலை வாய்க்கு மிவர்க்கு. (ருக)

உருவமற்ற துன்னுருவ மோமாணு காச
சருவவுல கிற்குநீ சாட்சி—கருவுற்று
நீபிறந்த தில்லை நினைவிற்கு மெட்டாய்நீ
நீபிரம மீதே நிசம். (௩௨)

அறிவான் பூரண ணநந்த ணன்மா
அறைபிரம மாதியே யாகக்—குறிகுணங்கள்
அற்றிட்ட வென்வடிவுக் காம்பே ரகந்தமுள
நற்றவரீ தேற்பார் நயந்து. (௩௩)

நானே பலவுடம்பி னுடகஞ்செய் சிற்சொருபன்
நானே யெவைக்குமுத னன்வெளியென்—றானை
வடிவென்றல் கைவிடினீ வல்லசிவ மாவாய்
கடியுடம்பு நாட்டங் கடி. (௩௪)

உடம்புநினை வற்று லொழியுநினை வெல்லாம்
உடம்புநா னென்னினினை வோங்கும்—உடம்பு
நினைவில்வர வொட்டாம னீற்றி யழித்தே
உணைப்பரமா சிந்தித் துறு. (௩௫)



உலகத்தை யுந்தனையு மோராமை யாலே
பலபிறப்பும் பற்றிப் பதைத்தோம்—மலவுடம்பை
எந்நாள் வரைசுமப்ப தேகவெளி யாகாமல்
இன்னே சிவவடிவா வெண். (௩௬)

கரும்பிரசம் போலுன்னைக் காண்பையெனின் மாணு
அரும்புமணம் பூவினிக ராவாய்—இரும்புமனக்
கட்டற்றுப் பாசங் கழன்று பராக்கின்றிச்
சுட்டற்று நிற்றி துணிந்து. (௩௭)

அறிவே சிவமென்ற வாப்தமொழி நம்பி
அறிவுவடி வாகா தயர்ந்து—வெறிகொண்டு
காரணத்தைக் கைவிட்டுக் காரியத்தைக் கைக்கொண்டால்
ஆரணத்திற் கென்னட்ட மாய். (௩௮)

ஆரணத்திற் கொப்ப வறிஞ ரநுபவித்துப்
பூரணமாக் கண்டுரைத்த போதமொழித்—தாரணத்தை
உண்மையென நம்பி யுறுவாய் சிவவடிவாய்
பெண்மயக் காந்திரையைப் பேர்த்து. (௩௯)

அன்னியந்தா னென்னளவு மாறுப் பிறப்புறுவோம்
என்னவித சாதனங்க ளெய்திடினும்—நன்மாறு
தன்னுண்மை காணார் தவிப்பார் பிறப்புறுவார்
உன்னிமித்த மாவுரைத்தே னோர். (௪0)

பல்லோருங் காணவே பாசவை ராக்யமுற்றேன்
வல்லவிட் காமதவ மாண்பினால்—இல்லா
துடம்பென்று கண்டே னுணர்வுவெளி யானேன்
திடமாகச் சிந்தனையைச் செய்து. (௪௧)

அறிவு சிவத்தோ டயிக்கியமா மென்பார்
அறிவுநிலை தானு வறியார்—அறிவா
இருந்தறிவா ராகி லியம்பாரிவ் வாறு
அருந்தவத்து மாணவனே யாய். (௪௨)

உடல்வேறு தான்வேறென் றோயாமற் கண்டால்
கடனே றுடம்பிடும்பை காணு—திடமாக்
கடவெளிகாட் டென்றுற் கடமுடைத்தோ காட்டல்
கடவுடம்பி லுன்னையிங் ஙன் காண். (௪௩)



பிறப்பறுத்த னம்மாலே பிழைபல செய்யும்
பிறப்பிறப்புஞ் சேர்தனமாற் பேசின்—இறப்படிப்
பில்லாதா ரீசனு ரிட்டமவன் றந்ததென்பார்
எல்லாருஞ் சிந்தனையே யெண். (௪௪)

அள்ளக் குறையாத வாநந்த நின்வடிவம்
கள்ளமிலா மாணவனே காண்பாய்நீ—உள்ளபடி
நல்லா ரநுபவமா நான்கண் டுனக்குரைத்தேன்
துல்லியனே நீசோதி சூழ். (௪௫)

இந்திர சாலவுல கெப்போது முண்மையல
அந்திபக லெங்குண் டறிவைவிட்டுச்—சிந்தை
மயக்கற்று நிற்கநிற்க மாதவனே யின்பச்
சுயவறிவே நீயாவாய் சூழ். (௪௬)

பிறப்பிறப்பு மூப்புப் பிணியுமெனக் கில்லை
இறஞான ரூப சிவநான்—இறமாக
ஆணையிட்டுத் தாண்டவஞ்செய் தாநந்தப் பாட்டிசைப்பேன்
ஆணையிடு கின்றே னமர்ந்து. (௪௭)

சத்துச்சித் தாநந்தந் தன்னையன்றி யில்லையென்று
நித்தநீ சிந்தித்து நிற்பாயேல்—அத்துவித
சொச்சொருபந் தானு சொலிப்பாய் மயக்ககன்றே
அச்சமுனக் கில்லை யறி. (சஅ)

தன்னி லிருந்து சகமுதித்த லைக்கண்டார்
தன்னைவிட வேறுச் சகங்காணூர்—அன்னியமா
இங்கங்கு மேயொன்று மில்லையீ துண்மையென்பார்
துங்க வறிவுடையாய் சூழ். (சகூ)

தனியேநின் ரோர்முகமாய்ச் சாயாது நிற்கின்
பனிநீரின் மூழ்கியதொப் பாக—இனிமையுற
அங்கங் குளிர்ந்துபே ரானந்த மேலிடும்பார்
எங்குந்தண் ணென்னு மியைந்து. (ரு0)

தனிக்கத் தனிக்கவுள்ளே சாந்த மொளிரும்
கனிந்து மனமுங் கரையும்—தனியின்பம்
காணவே தோன்றுங் கடற்புரண் டாற்போல
மாணவனே சொச்சொருப மன். (ருக)



ஆநந்த மெங்கெங்குண் டாங்காங் கறிவுண்டிங்
காநந்த மாயுன்னை யாயாது—போனதனல்
எப்பொருட்குங் கீழா யிருக்கின்று யன்பனே
தப்பொழிய நிற்குநிலை சார். (ருஉ)

அணுவு மகத்து மறிவின் மயமே
அணுமகத் தில்லையறி வன்றி—அணுவின்
மயமாக நிற்கின் மகத்தாக மாட்டோம்
அயலறியு நாமார்நீ யாய். (ருங)

மாணைக் காத்தேந்து மாதேவன் மீதாணை
ஏனை யுயிரெல்லா மென்வடிவே—மானையிடம்
வைத்தமா தேவனுமுன் மாலறநீ நானென்றான்
சத்தியமா நால்வர்க்குந் தான். (ருச)

உணர்வே சிவமென் றுரைத்தாலு மாணை
உணர்வேநா மென்ப துணரார்—தணலொத்த
பித்துப் பிடித்துப்பெண் பேய்போ லலைந்துலக
வத்துமெய் யென்பார் வகுத்து. (ருரு)

சத்துச்சித் தாநந்த சர்வபரி பூரணமாம்
வத்துநீ யென்றுரைக்கும் வாய்மைகண்டால்—சுத்தமாம்
ஆத்ம சிவமே யநந்தம்பேர் பெற்றதென
ஏத்தி நமைப்பணிவோ மிங்கு. (௫௬)

கடலொத்த வுன்னுருவைக் கண்டாலின் பாவாய்
திடவறிவி னலதனைத் தேட—மடமாணு
காதமாந் தூரமிலை காண்பாய்நீ தானறிவாய்
சோதனைசெய் யாநந்தந் தோய். (௫௭)

போதுவா யிருப்பதெது பொன்றுப் பொருளே
அதுவிது வாகா தறிநீ—எதுவுமே
நாமல்ல தில்லை நடுவிலிருந் தேயுணர்வாய்
நாமமுதற் கற்பனைபோ நாடு. (௫௮)

தானொருவன் றானே சகலமொடு கேவலத்தை
வானுருப்போற் றண்டி வயங்குவோன்—தானொருவன்
முன்னிலையி லிச்சகத்து மூன்றுதொழி லுற்றவரும்
என்ன புதுமை யியம்பு. (௫௯)

சுகதுக்கந் தாக்காத சுத்தபர நானென்
றகபமதை யற்று ரறைந்தார்—இகலாய்
அவனவனென் சிந்தையற்று லாநந்த போத
சிவவடிவே யாவாய் தெளிந்து. (௬0)

ஈசன்சங் கற்பத் தெழுந்ததெனப் பல்சிருட்டி
மாசின்றி நீமாணு மன்னுவையேல்—ஈசன்றான்
உன்னுருவைக் காட்டி யொளிரவைப்பா னின்புருவா
என்னுணை யீதுண்மை யெண். (௬௧)

படிக்குங்கண் ணேபோற் பரங்காண்கண் வேண்டும்
படிக்குங்கண் பாரா பரனைத்—துடிப்புற்று
வேறுபட லற்று விளங்குமகக் கண்பெற்றால்
வீறுபரங் காண்பாய் விரைந்து. (௬௨)

இந்தவணு மாணுநீ யெம்பா லிதுகாறும்
பந்தமறக் கேட்டபடிசெய்த—சிந்தனையால்
கண்டதொளி யாமற் கழறுகவென் றுன்குரவன்
தொண்டனுஞ் சொல்வான் றெழுது. (௬௩)

நிட்டைசெயுங் காலத்தி னீள்சன்ம வாசனைகள்
வட்டமிட் டாடிமிக வாட்டுகின்ற—சிட்டனே
வாசனையை வெல்லும் வழியருளென் றேபணிய
ஆசிரியன் சொல்வா னமைந்து. (சுச)

இப்பழைய வாசனையை யெவ்வாறு கொல்வனென
அப்பனே யஞ்சி யழுங்கலுறேல்—ஒப்பிலியான்
ஆறிவ னானந்த னற்புதனென் றுன்னுகின்ற
கூரறிவால் வாசனையைக் கொல். (சுரு)

இந்தமா வாசனைக ளெங்கெழு கின்றவெனச்
சிந்தையுற நோக்கிநீ தேறுவையேல்—பந்தஞ்செய்
வாசனைக டோன்றா மனக்கலக்கம் வாராது
பாசமறு ஞானமுறும் பார். (சுசு)

பாசமனை மக்கள் பகைநண்பர் பூடணம்பொன்
தாசரெனக் கொண்டால் தடைசெய்யா—மாசற்ற
நிட்டைசெயுங் காலத்து நீயவற்றைச் சூரனு
வெட்டிவெட்டிப் போக்கு விரைந்து. (சுஎ)



போய்வடிவ வாசனைகள் புத்திரக ளத்திரரை
மெய்போலக் காட்டி மிரட்டுமே—அய்யாகேள்
சிந்தனையாம் வாளாற் சிதைப்பாயே லங்கவற்றை
அந்தமிலா வாநந்த மாம். (சுஅ)

புற்றெழுமீ சற்போற் பொலபொலெனப் பல்லெண்ணம்
உற்றுச் சமாதியின்கண் ணுள்ளலைக்கும்—பற்றலர்போல்
நித்திரையும் வந்து நிலையழித்துப் பாழாக்கும்
உத்தமனே போக்கிவற்றை யோர்ந்து. (சுகூ)

வாசனையே பந்தமாம் வாசனையே மாண்டுதித்தல்
வாசனையே மக்கண்மனை வையமெலாம்—வாசனையால்
ஆசை யறுரடையா ராநந்த மாநிலையை
ஆசைபல வாறலைக்கு மாய். (எ0)

முன்சன்ம வாசனைகள் முன்பின் பெருதெழும்பும்
நன்மைதா ராதென்று நன்மாணு—மன்னிநான்
என்றுரைக்க வூனை யெனமாக்கு மாயத்தை
நன்றென்று நம்பே னயந்து. (எக

ஆன்மவிசா ரத்தை யறிஞர்நல் வித்தையென்பர்
ஆன்மாவைக் காணவிஃ தான துணை—ஆன்மாவை
முக்குணமா யைமறைக்கு மூடுபனி யாதவனைச்
சிக்கி மறைப்பதுபோற் றேர். (எ௨)

நிட்டைக்கண் ணீங்காது நின்று விழித்தக்கால்
தொட்டமுன் வாசனைக ளோன்றுமேல்—சிட்டர்
அநுபவநா லோதி னடங்கு மவைதாம்
பினுமுன் னிலையிற் பிறங்கு. (எ௩)

வாசனையைப் பாழாக்க வைகறையி னித்திரைவிட்
டீசனுரு வாங்குருவை யேத்தியே—நேச
முகங்கழுவி பூதியிட்டு முத்தரடி போற்றி
அகமுகமா வண்ணூர் தமர். (எ௪)

அண்ணூர்ந்து நிற்கநிற்க வன்றுநான் சொற்றவணம்
எண்ணுபல வாசனையு மிம்மனமும்—கண்மணியே
உன்வடிவாம் பேரொளியி லோடிவந்து மாண்டொழியும்
நின்வடிவந் தோன்று நிசம். (எ௫)

பூசைசெய்து பின்பு புனிதருள் சாத்திரத்தை
ஆசையற வாசிக்கி னன்புடனே—மாசற்ற
மாணவனே யுன்மனந்தான் மாண்பா வொருமையுறும்
ஆணவமு மற்றுவரு மாய். (எ௬)

இன்னுமோ ருத்தி யியம்பக்கேள் காணவுனை
அன்ன மரைவயி றூரவுண்டால்—துன்னி
மயக்கு முறக்கமும் வாசனையு மாறும்
வியக்குநிலை காண்பாய் விரைந்து. (எஎ)

எங்கெந்தச் சாதனமு மீதின்றேற் றங்காது
சிந்தித் திதனைத் தெளிமாணு—இந்த
உடம்பு கொழுத்தா லொடுங்காது சித்தம்
மடங்காதாங் கார மதி. (எ௮)

இந்தவித மன்றி யியம்புகின்றேன் மற்றுமொன்
றெந்த விதத்துநீ யீடேறச்—சந்ததமும்
எவ்வுயிரு மீசனென வெண்ணிப் பிறர்பசியாம்
எவ்வமறச் செய்வா யினைந்து. (எ௯)

எவ்வுயிரும் வாழ வெறும்பு மிதியாமல்
செவ்வையறி வோடுநீ செல்வாயேல்—கவ்வுமனம்
நில்லா தழிந்துவிடு நேராங் குருமார்க்கம்
செல்லாது மாயைச் செயல். (௮௦)

என்னுருவஞ் சோதியென வெள்ளளவு மாறாமல்
உன்னிச்சிந் திக்கி லொளிவெளியாம்—அன்னியநீ
ஆகா திருந்தா லநந்தபணி செய்தாலும்
ஆகா யழியா யறி. (௮௧)

அகண்ட வடிவான வான்மாவைக் கண்டோர்
இகபரத் தாசைதனை யெய்தார்—சகமயக்கில்
உற்றார்போற் காண்பா ருணர்வாக வேயிருப்பர்
கற்றார் நிலையிதுநீ காண். (௮௨)

தனையின் புருவாந் தனியறிவென் றேகண்டோன்
இனையுலகர் போலபிந யித்து—மனைவிமக்கள்
சாயையெனக் கண்டு சதாநந்த மாயிருப்பன்
மாயைமனச் சேட்டை வதைத்து. (௮௩)



இகபரமு மாக விலங்குவது யாது
அகமா மதுநீ யதனை—அகமமதை
அற்றுச் சமாதிசெயி னநந்த மாயிருப்பாய்
பற்றறுதிக் கெல்லையிது பார். (௮௪)

அகண்டபரி பூரணமா வானுனீ காண்பாய்
இகபரமெ லாநான்று னென்றே—அகமலர்த்
துற்ற துரைத்தேன்யா னுன்னன்பு கண்டுனக்குச்
சற்றுமிதி லையமின்று தான். (௮௫)

தன்னைவிட வின்றறிவு தன்னறிவே யாநந்தம்
உன்வடிவ மேசிவமா முண்மையிதாம்—உன்றனக்கிங்
குள்ளங்கை நெல்லிபோ லோதினேன் மந்தணத்தை
உள்ளங்கொண் டுய்வா யுணர்ந்து. (௮௬)

திட்டாந்த தாட்டாந்தச் சிக்கையறுத் துன்வடிவைப்
பட்டம் பகற்பொருள்போற் பார்த்துய்யச்—சிட்டனே
மாவாக் கியபோதம் வாகாய்த்தந் தோமினிச்செய்
தாவா வரசு தனித்து. (௮௭)

உற்றுற்று நிற்கநிற்க வுன்வடிவந் தோன்றிவிடும்
சற்றுமனங் கோணாது தங்கியிரு—பற்றுமனம்
சொற்றபடி கேளாதே சொல்லும் பொருளுமற்ற
உற்றுன்னைக் காண்பா யுவந்து. (அஅ)

சுத்த பரவெளியைச் சொந்தமா டாவளித்தோம்
எத்தேச காலமுநீ யின்பமுறப்—பத்தா
சுயஞ்சோதி யாதலினீ சோர்வற்றந் நாட்டில்
நயமாக வாழ்தி நயந்து. (அகூ)

சிந்தை விகற்பமறத் தேயாச் சிதம்பரமா
அந்தமிலா வென்வடிவை யாய்ந்தறிந்து—பந்தமின்றி
ஆநந்த மேவடிவா யய்யா நடிக்கின்றேன்
பானந்த வெங்கும் பரிந்து. (கூ0)

என்னின்பே யிவ்வுலகா வேதமறக் காண்கின்றேன்
அன்னே யருட்டாயே யாரியனே—என்னில்
உலக முதித்தொடுங்க லோயாது கண்டு
கலக மொழிந்தேன் கதித்து. (கூக)



பகையுற வென்னைவிடப் பார்க்கின்வே றில்லை
பகையுறவு தாக்காப் பரன்யான்—இகபரங்கள்
என்னையன்றிக் காணேன்யா னென்னின்பே யென்றறிந்தேன்
மன்னுமனை மக்களெலா மற்று. (கூஉ)

பயமனைத்தும் போக்கினேன் பாசந் துறந்தேன்
வியமா முணர்ச்சியின் வாய்ப்பால்—சுயமான
சோதிவடி வாகிச் சுகமுற் றொளிர்கின்றேன்
ஏதியற்று வேன்கைம்மா றின்று. (கூங)

ஞானக்கண் ணெற்களித்த நான்முதலாச் சற்குருவே
ஊனக்கண் பற்றோ டொளிரவில்லை—ஞானமாம்
தீக்கண்ணாற் பாசமது சோரா தழிக்கின்றேன்
தீக்கண் ணாளுத் திகழ்ந்து. (கூச)

நன்மையையுந் தீமையையு நான்பொதுவாப் பார்க்கின்றேன்
தன்மையு முன்னிலையுந் தானாகிப்—பன்னரிய
நானே யுலகா நடிக்கின்றே னல்லசிவந்
தானே யெனவறிந்து தான்.

சத்தமுத லாம்விடயந் தாக்கா தியானறிவாய்
எத்தொழிலுஞ் செய்கின்றே னேதமின்றிச்—சித்துருவாய்
என்னை யறிகில்றே னேக பரவெளியாய்
என்னுரைப்பே னிக்கிலையை யிங்கு. (கசசு)

என்னபுண்ணி யஞ்செய்தே னேகவெளி யாதற்கென்
றுன்னவுன்ன வின்ப முறுகின்றேன்—என்னை
அறியா வரையி லநந்தபிறப் புற்றேன்
குறியாம் பலபொருளைக் கொண்டு. (கசஎ)

சொல்லவோ வாயில்லை சுத்தவறி வாநந்தம்
அல்லற் கறுதியிட மாயிற்று—தொல்லையறக்
கண்டே னெனையான் கடலினமு தம்போலத்
தொண்டரையாள் சற்குருவே சூழ்ந்து. (கசஅ)

முத்தி தருமரசே மூவர் பணிமுதல்வா
பத்திக் கிரங்கும் பழம்பொருளே—எத்திக்கும்
நீயே யெனவணங்கி நின்னருளால் வாழ்கின்றேன்
தாயே முதலே தனித்து. (கசக)

---

அய்யா வருள்வடிவே யாநந்த வத்துவிதா
உய்யவழி காட்டிவைத்த வொப்பிலியே—பொய்யின்றி
விண்ணைத் தொளிர்கின்றேன் வேண்டுங்கைம் மாறறியேன்
தொண்டு புரிவதலாற் சூழ்ந்து. (க00)

---

## வாழ்த்து.

எண்டிசையும் போற்று மினியசங்க ரன்வாழி
அண்ணாற்பொன் னம்பலவ னார்வாழி—எண்ணரிய
கம்பிறப்பைப் போக்குமரு ணாசலனார் தாள்வாழி
அம்புவியோர் வாழியின் பாாத்து.

என்குருவை யாக்கண்ணு மென்னிதயத் துண்மேவு
முன்பின்னர் ஞானிகளு மூவுலகும்—இன்னலற்று
வாழியிக்ர பீடம் வளர்ஞான சாரநூல்
வாழிசச்சி தாநந்தன் மாண்பு.

ஞானசார விளக்கம் முற்றிற்று.

பாயிரமுட்படச் செய்யுள் ககo.

தே. அ. சாமிகுப்புசாமி யவர்களியற்றிய

# புத்தகங்கள்.

1. குருஸ்தவம் ... ... 1
2. போத விளக்கம் ... ... ... 2
3. சொரூபாநந்த விளக்கம் ... ... 1
4. அநுபவாநந்த விளக்கம் ... ... 1
5. சாமி விளக்கம் ... ... ... 1
6. திருவள்ளுவர் தோத்திர விளக்கம் ... 1
7. கற்பு விளக்கம் ... ... ... 3
8. அன்னதான விளக்கம் ... ... 2
9. கருணை விளக்கம் ... ... 2
10. நன்மதி தீபம் ... ... ... 4
11. விபூதி விளக்கம் ... ... ... 4
12. ஞானசார விளக்கம் ... ... ... 1
13. துறவுநிலை விளக்கம் ... ... ... 4

ஷை விளக்கங்களும் தீபமும் அரியபெரிய தத்துவ ஆராய்ச்சிகளையும், நீதிகளையும், பல வித்துவான்களின் அபிப்பிராயங்களையும் பெற்று, வெகுஜன சமுகத்தில் புலவர் பலரால் அரங்கேற்றஞ் செய்யப்பட்டனவாம்.

---

இந்நூற்களின் விக்கிரயப் பொருள், இந்நூற்களின் ஆசிரியர் நடாத்தும் ஸ்ரீ சச்சிதாநந்தசுவாமிகளின் குருபூஜைகைங்கரியத்திற்கே உபயோகிக்கப்படுவதால், இவற்றை யாவரும் வாங்கிப் பெறும் புண்ணியத்திற் காளாவார்களெனத் திருவருளைச் சிந்திக்கின்றனன்.

இல்லற விளக்கம் - அறிவுநிலை விளக்கம் என்னும் இரண்டு புத்தகங்களும் விரைவில் வெளிவரும்.

## புத்தகங் கிடைக்குமிடங்கள்.

ரிப்பன் பிரஸ், சென்னை.

ஆசிரியர். கோ. வடிவேலு
செட்டியாரவர்கள்
கோமளேசுரன் பேட்டை,
சென்னை.

வெ. சொக்கலிங்கம்
பிள்ளையவர்கள்
கருட்டு ஷாப், பொறையாறு,
தரங்கம்பாடி போஸ்டு.

தே. அ. சாமிகுப்புசாமியவர்கள்
86, ஸ்ரீ சச்சிதாநந்த சங்கத்தலைவர்
வெங்கடேச பத்தன் வீதி,
பெருமாள்பேட்டை,
வேப்பேரி போஸ்டு, சென்னை.

இங்ஙனம்,
காளத்தி - இ - சிதம்பரசாமி [illegible]
7, மணியக்கார செள்ஷ்டிரி [illegible]
இராயபுரம் போஸ்டு, [illegible]

39250





39250

39250





39250



திருஞானசம்பந்தர்



திருநாவுக்கரசர்



சுந்தரமூர்த்தி



மாணிக்கவாசகர்